NEWS RELEASE

UNITED NATIONS HUMAN RIGHTS
OFFICE OF THE HIGH COMMISSIONER

# இலங்கை: அடிமை முறை என்ற பெருங் கொடுமையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கென 'அனைவரையும் உள்வாங்கும் சமூகம் ஒன்றை' கட்டியெழுப்ப வேண்டுமென ஐ நா நிபுணர் வேண்டுகோள் விடுக்கிறார்

கொழும்பு (டிசம்பர் 3, 2021) – சமகால அடிமைத்துவ வடிவங்களைக் கையாள்வதற்கென இலங்கை வலுவான சட்ட ரீதியான சட்டகம் ஒன்றை கொண்டிருப்பதுடன், தொழில் புரிவதற்கான குறைந்தபட்ச வயதெல்லையை 14 வருடங்களிலிருந்து 16 வருடங்களாக அதிகரித்தமை மற்றும் சிறுவர் ஊழியம் இல்லாத வலயங்களை ஸ்தாபித்தமை போன்ற ஏனைய துறைகளில் முன்னேற்றத்தைச் சாதித்துக் கொண்டுள்ளது. எவ்வாறிருப்பினும், ஒரு சில சந்தர்ப்பங்களில் பலவந்தமான ஊழியம் மற்றும் அடிமைச் சேவகம் என்பவற்றுக்கு இணையானவையாக இருந்து வரும் சாதி அடிப்படையிலான பாரபட்சம் மற்றும் ஊழியச் சுரண்டல் போன்ற பாரிய பிரச்சினைகளை வெற்றி கொள்ள வேண்டுமானால், இலங்கை பெருமளவுக்கு அனைவரையும் உள்வாங்கும் மற்றும் அனைத்துத் துறைகளையும் அரவனைத்துக் கொள்ளும் ஒரு சமூகமாக உருவாக வேண்டுமென ஐ நா நிபுணர் இன்று தெரிவித்தார்.

சமகால அடிமைத்துவ வடிவங்கள் தொடர்பான ஐ நா விசேட அறிக்கையாளர் டெமோயா ஓபோகாட்டா பால்நிலை, வயது, இனத்துவம், சாதி, வர்க்கம் மற்றும் ஏனைய காரணிகள் என்பவற்றின் அடிப்படையில், ஊழியச் சுரண்டல் மற்றும் பாரபட்சம் என்பவற்றுக்கு இடையில் நிலவிவரும் இணைப்புக்கள் குறித்து தாம் கவலையடைந்திருப்பதாக கூறினார்.

''பலவந்தமான ஊழியம், சிறுவர் உழைப்பு மற்றும் ஏனைய சுரண்டல் நடைமுறைகள் என்பவற்றின் மூலமாக தொடர்ந்து நிலவி வரும் பாரபட்ச இயல்பிலான மனப்பாங்குகள் மற்றும் நடைமுறைகள் என்பவற்றை முடிவுக்கு கொண்டு வர வேண்டிய தருணம் வந்துள்ளது'' என இலங்கையில் மேற்கொண்ட எட்டு நாள் விஜயத்தின் முடிவின் போது கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் ஓபோகோட்டா தெரிவித்தார்.

''ஒரு சமூகம் செழித்து வளர்வதற்கும், மக்கள் தரமான கல்வி, பயிற்சி மற்றும் கண்ணியமான வேலை வாய்ப்புக்கள் என்பவற்றை அணுகுவதற்கும் அது அனைவரையும் உள்வாங்கும் ஒரு சமூகமாக இருந்து வருதல் வேண்டும்; அதற்கென அனைவர் தொடர்பாகவும் நிலவி வரும் சமகால அடிமைத்துவ வடிவங்களை முடிவுக்கு கொண்டு வருதல் அத்தியாவசியமானதாகும். பெருமளவுக்கு ஓரங் கட்டப்பட்டிருக்கும் மக்களையும் உள்ளடக்கிய விதத்தில் அரசாங்கம் மக்களின் குரல்களுக்குச் செவிமடுத்தல் வேண்டும். சாதகமான மாற்றங்களைத் தூண்டும் பொருட்டு சாதி அடிப்படையிலான பாரபட்சம் போன்ற கூருணர்வு மிக்க பிரச்சினைகள் தொடர்பாக காட்டி வரும் மௌனம் கலைக்கப்படுதல் வேண்டும்.''

தனது இலங்கை விஜயத்தின் போது ஓபோகாட்டா அரசாங்க அதிகாரிகள், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, சிவில் சமூக அமைப்புக்கள், தொழிற் சங்கங்கள் மற்றும் ஐ நா ஆகிய தரப்புக்களையும், அதே போல மனித உரிமைகள் பாதுகாவலர்கள், கல்விமான்கள்,

குடிபெயர் தொழிலாளர்கள் மற்றும் ஊழியச் சுரண்டல்களினால் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோரையும் ஓபோகாட்டா சந்தித்தார். மேலும், கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் அமைந்திருக்கும் இரு ஆடைத் தொழிற்சாலைகளுக்கு அவர் விஜயம் செய்ததுடன், கண்டிக்கும், அப்பகுதியில் இருக்கும் தேயிலைத் தோட்டங்களுக்கும் அவர் பயணங்களை மேற்கொண்டார்.

''ஓரம் கட்டப்படுதல், பாரபட்சம், சுரண்டல் இயல்பிலான வேலை நிலைமைகள் மற்றும் மிக மோசமான வாழ்க்கை நிலைமைகள் என்பவற்றினால் மலையகத் தமிழர்கள் ஏற்றத் தாழ்வான விதத்தில் பாதிக்கப்பட்டிருப்பதை நான் நேரடியாகப் பார்த்தேன்'' என்கிறார் ஐ நா நிபுணர்.

வீட்டு வேலைத் துறையிலும், முறைசாராத பொருளாதாரத்தின் ஏனைய துறைகளிலும், சேவைகள் கைத்தொழில் துறையிலும் சிறுவர் ஊழியம் இடம்பெற்று வரும் சம்பவங்கள் குறித்தும் ஓபோகாட்டாவுக்கு அறிக்கைகள் கிடைத்திருந்தன. மேலும், தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் பால்நிலை ஏற்றத்தாழ்வுகள் மற்றும் பெண்கள் மீது தாக்கத்தையெடுத்து வரும் பாரபட்சம் என்பன குறித்தும் கரிசனையுடன் கூடிய விதத்தில் அவர் குரல் எழுப்பினார்.

கிராமிய பிரதேசங்களில் வறுமையில் வாழ்ந்து வரும் பெண்களைப் பெருமளவுக்கு குறி வைத்துச் செயற்பட்டுக் கொண்டிருக்கும் நுண்நிதித் திட்டங்கள் குறித்துக் குறிப்பிட்ட விசேட அறிக்கையாளர் ஒபோகாட்டா, இவை பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மக்களின் கடன் சுமை மட்டங்களை அதிகரித்து வருவது பெருமளவுக்கு கரிசனைக்குரிய ஒரு விடயமாக இருந்து வருகின்றது எனச் சொன்னார். இலங்கையில் தற்பொழுது அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுடன் ஒப்பிடும் பொழுது சம்பளங்கள் குறைந்த மட்டத்தில் இருந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தேயிலைப் பெருந்தோட்டங்கள் மற்றும் ஆடைத் தொழிற்சாலைகள் போன்ற தனியார் துறை வணிகங்களில் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் மீண்டும் தொழிலில் அமர்த்தப்பட்டு வரும் விடயம் குறித்த அறிக்கைகள் ஒபோகாட்டாவுக்கு கிடைத்திருந்தன. சிவில் சமூக பிரதிநிதிகள், மனித உரிமைகள் பாதுகாவலர்கள் மற்றும் தொழிற் சங்கங்களின் உறுப்பினர்கள் போன்றோர் தொடர்ந்து துன்புறுத்தலுக்கும், அச்சுறுத்தலுக்கும் உள்ளாக்கப்பட்டு வருகின்றார்கள் என்றும், சிவில் சமூகத்திற்கான வெளி வர வரச் சுருங்கி வருகின்றது என்றும் அவருக்குத் தகவல்கள் கிடைத்திருந்தன. ஒன்றுகூடும் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதற்கு கொவிட் பெருந்தொற்று சம்பந்தப்பட்ட வரையறைகளைப் பிரயோகிக்கும் செயற்பாடும் இதில் அடங்குகின்றது.

அனைத்து விதமான பால்நிலை அடையாளங்கள் மற்றும் பாலீர்ப்புப் போக்குகள் என்பவற்றைக் கொண்ட பாலியல் தொழிலாளர்கள் பாரபட்சம் மற்றும் சமூகக் களங்கம் என்பவற்றை எதிர்கொண்டு வருவதுடன், சட்டத்தை அமுல் செய்யும் உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கிய விதத்தில் பாலியல் ரீதியில் சுரண்டப்படக்கூடிய மற்றும் துஷ்பிரயோகம் செய்யப்படக்கூடிய ஆபத்தையும் அவர்கள் குறிப்பாக எதிர்கொண்டுள்ளார்கள்.

இந்த விடயம் தொடர்பான விசேட அறிக்கையாளரின் அறிக்கை 2022 செப்டம்பர் மாதத்தில் மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்படும்.

முடிவு

**திரு. *Tomoya Obokata*** (ஜப்பான்) சர்வதேச சட்டம் மற்றும் மனித உரிமைகள் குறித்த ஒரு கல்விமான் ஆவார். எல்லை கடந்த ஒழுங்கமைந்த குற்றச் செயல்கள், மனித வியாபாரம் மற்றும் நவீன அடிமை முறை என்பன குறித்து அவர் சிறப்புத் தேர்ச்சி பெற்றுள்ளார். அதன்

காரணங்கள் மற்றும் பின்விளைவுகள் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் சமகால அடிமைத்துவ வடிவங்களின் விசேட அறிக்கையாளர் *பதவியை அவர் 2020 மே மாதம் பொறுப்பேற்றார். தற்பொழுது அவர் கீல் பல்கலைக்கழகத்தில் சர்வதேசச் சட்டம் மற்றும் மனித உரிமைகள் துறை பேராசிரியராக பணியாற்றி வருகின்றார். முன்னர் (ஐக்கிய இராச்சியம், பெரிய பிரித்தானியா மற்றும் வட அயர்லாந்து ஆகிய நாடுகளில் அமைந்திருக்கும்) பெல்பாஸ்ட் குயின்ஸ் பல்கலைக்கழகத்திலும், டன்டீன் பல்கலைக்கழகத்திலும் அவர் ஆசிரியராக பணியாற்றியுள்ளார். எல்லை கடந்த குற்றச் செயல்கள், மனித வியாபாரம் மற்றும் நவீன அடிமைத்தும் போன்ற பிரச்சினைகள் குறித்து சம்பந்தப்பட்ட பங்கீடுபாட்டாளர்களுடன் பணியாற்றுவதில் அவர் விரிவான அனுபவத்தைக் கொண்டுள்ளார். மேலும் இந்தத் தலைப்புக்கள் தொடர்பாக பல ஆக்கங்களையும் வெளியிட்டுள்ளார்*

***விசேட அறிக்கையாளர்கள், மனித உரிமைகள் பேரவையின் விசேட நடைமுறைகள் (Special Procedures) என அறியப்படும் கட்டமைப்பின் ஒரு பாகமாக இருந்து வருகின்றனர். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் முறைமையின் சுயாதீன நிபுணர்களைக் கொண்ட மிகப் பெரிய தொகுப்பாக இருந்து வரும் விசேட நடைமுறைகள், பேரவையின் சுயாதீனமான, உண்மைகளைக் கண்டறியும் மற்றும் கண்காணிக்கும் பொறிமுறைகளைக் குறிப்பிடுவதற்கென பயன்படுத்தப்பட்டு வரும் ஒரு பொதுவான பெயராகும். இப்பொறிமுறைகள் ஒன்றில், குறிப்பிடப்பட்ட ஒரு நாட்டில் நிலவி வரும் நிலைமைகளைக் கவனத்தில் எடுக்கின்றன; அல்லது உலகில் அனைத்துப் பாகங்களிலும் நிலவி வரும் வெவ்வேறு தலைப்புக்களிலான பிரச்சினைகளைக் கவனத்திலெடுத்து வருகின்றன. விசேட நடைமுறைகள் நிபுணர்கள் தொண்டு அடிப்படையில் பணியாற்றி வருவதுடன், அவர்கள் ஐ நா அமைப்பின் ஊழியர் அணியைச் சேர்ந்தவர்களாக இருந்து வரவில்லை. அத்துடன், தமது வேலைக்கென அவர்கள் எத்தகைய சம்பளங்களையும் பெற்றுக்கொள்வதில்லை. எவையேனும் அரசாங்கம் அல்லது நிறுவனம் என்பவற்றிலிருந்து சுயாதீனமானவர்களாக அவர்கள் இருந்து வருவதுடன், தமது சொந்தப் பொறுப்பின் கீழ் பணியாற்றி வருகின்றார்கள்.***

*ஐ நா மனித உரிமைகள் இலங்கைக்கான பக்கம் -* Sri Lanka

*மேலும் தகவல்கள் மற்றும்* ***ஊடக வேண்டுகோள்கள்*** *தொடர்பாக தயவு செய்து தொடர்பு கொள்ளவும் : திருமதி சத்யா ஜென்னிங்ஸ் (*satya.jennings@un.org*).*

*ஏனைய ஐ நா சுயதீன நிபுணர்கள் தொடர்பான ஊடக விசாரணைகளுக்கு தயவு செய்து தொடர்பு கொள்ளவும்: Souza (+41 22 928 9855 / renato.rosariodesouza@un.org), Jeremy Laurence (+ 41 22 917 7578 / jeremy.laurence@un.org).*

*ஐ நா சுயாதீன மனித உரிமைகள் தொடர்பான செய்திகளை ட்விட்டரில் பார்க்கவும்: Twitter@UN_SPExperts*

நாங்கள் வாழ்ந்து வரும் உலகம் குறித்து கரிசனை கொண்டுள்ளீர்களா?

**அப்படியானால் இன்றே மற்றொருவரின் உரிமைகளுக்காக குரல் கொடுங்கள்:**

#Standup4humanrights

இணையதளப் பக்கம் http://www.standup4humanrights.org